*EVERWIN VIDHYASHRAM*

*STD: IX* *L2 -* **தமிழ்** *(TERM-I)*

**இயல் - 5: கசடற மொழிதல்**

**செய்யுள்: குடும்ப விளக்கு (கவிதை பேழை)**

*I.* **பொருள் தருக:**

1. களர் நிலம் - உவர்நிலம்
2. மாக்கடல் - பெரிய கடல்
3. மின்னாள் - ஒளிரமாட்டாள்
4. தணல் - நெருப்பு
5. யாண்டும் - எப்பொழுதும்

*II.* **இலக்கணக் குறிப்பு:**

1. மாக்கடல் - உரிச்சொல்
2. ஆக்கல் - தொழிற் பெயர்
3. நல்லறிவு - பண்புத்தொகை
4. மலர்க்கை, வில்வாய் - உவமைத்தொகை
5. திருந்திய - பெயரெச்சம்

*III.* **குறுவினாக்கள்:**

1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

 * பெண்கள் கல்வி கற்க வேண்டும்.

 * பெண்கள் ஆண்டுளுக்குச் சமமாகப் பணிபுரிய வேண்டும்.

 * சமைத்தல் பணி இருவருக்கும் பொதுவாக்கப்பட வேண்டும்.

2. சமைப்பது தாழ்வா? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்.

அ) இன்பம் சமைப்பவர் யார்?

இன்பம் சமைப்பவர் இல்லத்தில் சமையல் செய்யும் பெண்கள் ஆவர்.

ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?

 * சமைப்பது தாழ்வன்று, ஏனென்றால் உணவை உண்டாக்குவது உயிரைக் காத்தல் என்ற அற்புதப் பணியாகும்.

*IV.* **சிறுவினாக்கள்:**

1. ஆசிரியர் குறிப்புத் தருக - பாரதிதாசன்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதிதாசன் |
| இயற்பெயர் | : | கனக சுப்புரத்தினம் |
| பிறப்பு | : | 29.04.1891 |
| மறைவு | : | 21.04.1964 |
| பெற்றோர் | : | கனகசபை, இலக்குமியம்மையார் |
| கற்றறிந்த மொழிகள் | : | தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் |
| சிறப்புப் பெயர்கள் | : | புரட்சிக் கவிஞர், பாவேந்தர் |
| சிறப்பு | : | பாரதியாருடன் கொண்ட பற்றால் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். |
| எழுதிய நூல்கள் | : | எதிர்பாராத முத்தம், இருண்ட வீடு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு தேனருவி, கண்ணகி புரட்சிக் காப்பியம் |

2. நூற்குறிப்புத் தருக - குடும்ப விளக்கு.

 * பாரதிதாசனின் சிறந்த படைப்புகளுள் ஒன்று குடும்பவிளக்கு.

 * குடும்பத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெரிதும் துணைபுரிபவள் பெண்.

 * அத்தகைய குடும்பத்தின் விளக்காக ஒளி வீசும் பெண்ணின் வரலாற்றைக் கூறும் நூல் குடும்ப விளக்கு, குடும்பக் கட்டமைப்புக்கு சிறப்பும் வளமும் சேர்க்கும் மாண்புமிகு குணப்பெருமைகளை உயிரோவியமாக வடித்திருக்கிறார் பாவேந்தர்.

 * புது மணமக்களுக்கு இந்நூல் ஒரு கை விளக்குப் போன்றது.

*III.* **நெடுவினா:**

1. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

**முன்னுரை:**

பாவேந்தர் பாரதிதாசனின் இனிய குடும்பக் காவியம் குடும்ப விளக்கு ஆகும். இனிய இல்லறம் நல்லறமாகத் திகழ இல்லத்தலைவின் பங்கு முக்கியமானது. இல்லத்தை ஆளும் தலைவியின் கல்வி பற்றிய எண்ணங்களைக் காண்போம்.

**களர்நிலம்:**

கல்லியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள் அந்த நிலத்தில் புல் விளையும், ஆனால் நல்ல பயிர் விளையாது. அது போல அறிவுடைய மக்கள் கல்வியறிவில்லாத பெண்களிடமிருந்து தோன்ற மாட்டார்கள்.

**திருந்திய கழனி:**

கல்வியறிவு பெற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள. அந்நிலத்தில் நல்ல பயிர் செழிப்பாக வளர்ந்து பலன் தருவதைப் போல நல்ல அறிவுடைய மக்கள் உருவாகின்றன. இன்றைய சூழலிலும் கலவி கற்ற பெண்கள் தான் சமுதாயத்தில் பலன் தருகிறார்கள்.

**ஆடவர்களின் அதிகாரம்:**

வானூர்தி செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை, ஆண்களின் கட்டுப்பாட்டால் விடுதலை கிடைக்க இயலாமல் போனது இன்றை சூழலில் இந்நிலையே நீடிக்கிறது.

**கல்வி வேண்டும்:**

மின்னல் போல் ஒளிரும் இயல்புடையவள் பெண். ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் ஒளிர மாட்டாள். அதனால் பெண்கள் கல்வியறிவு பெற்றால் மட்டுமே சமுதாயத்தின் விடிவிளக்காகப் பெண்களால்

ஒளி வீச முடியும். இன்றையச் சூழலில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் கல்வியறிவு பெறுவது வரவேற்கத்தக்கது.

**முடிவுரை:**

கல்வி கண் போன்றது, அத்தகைய கண்களைப் பாதுகாப்பது போல பெண் கல்வியைப் பேணி வளர்க்க வேண்டும்.

## செய்யுள் - சிறுபஞ்சமூலம்

*I.* **இலக்கணக் குறிப்பு தருக:**

1. அறிவார், வல்லார் - வினையாலணையும் பெயர்
2. தாவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. விதையாமை - எதிர்மறைத் தொழில்பெயர்

*II.* **குறுவினாக்கள்:**

1. மூவாது மூத்தவர், நூல்வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

**மூவாது மூத்தவர்:**

வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவரே ஆவார்.

**நூல் வல்லார்:**

நூல்களைப் படித்து ஆராய்ந்து உய்த்துணர்ந்தவர்கள் பிறர் உணர்த்தாமலே எதையும் தாமே உணர்ந்து கொள்வர்.

2. "விதைக்காமலே முளைக்கும் விதைகள்" - இத்தொடரில் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

* பாத்தி அமைத்து விதை விதைக்காமலே தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன.

* அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்வர்.

*III.* **சிறுவினாக்கள்:**

1. சிறுபஞ்சமூலம் - குறிப்பு தருக.

* சிறுபஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

* சிறுபஞ்சமூலம் என்பதற்கு ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள்.

* கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன ஐந்து வேர்களாகும்.

*இவ்வேர்களால் அன மருந்து உடலின் நோயைப் போக்கும் அது போலச் சிறு பஞ்சமூலப்பாடல்களில் கூறப்பட்டுள்ளன ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையை அகற்றி நலவழிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

*இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையின் வாழ்வியல் உண்மைகை எடுத்துக்காட்டுகின்றன.

2. காரியசான் - ஆசிரியர் குறிப்புத் தருக.

* சிறு பஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.

* இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.

* இவரது இயற்பெயர் காரி.

* ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்

* மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கின்றது.

## உரைநடை: கல்வியிற் சிறந்த பெண்கள்

*I.* **குறுவினா:**

1. சாரதா சட்டம் எதற்காகப் போடப்பட்டது?

* சாரதா சட்டம் குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காகப் போடப்பட்டது.

* குழந்தைத் திருமணம் பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் உள்ளது.

*II.* **சிறுவினாக்கள்:**

1. சங்க காலப் பெண்பாற்புலவர்கள் யாவர்?

* ஒக்கூர் மாசாத்தியார்

* ஆதி மந்தியார்

* வெள்ளி வீதியார்

* நக்கண்ணையார்

* வெண்ணிக் குயத்தியார்

* பொன்முடியார்

* அள்ளூர் நன்முல்லையார் போன்றோர்

2. மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

* இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.

* சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்.

* தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.

* சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

*இளைய பெண்களுக்கான விடிவெள்ளி 1926-இல் பாரிசில் அகில உலக பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

* 1930-இல் ஆதரவற்ற பெண்களுக்காக அவ்வை இல்லம் நிறுவியர்.

* 1952-இல் புற்றுநோய் சிகிச்சை நிறுவனத்ததை அடையாறில் நிறுவியவர் பத்மபூஷண் விருது பெற்றவர்.

3. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப்பணி குறித்த சிறப்பம்சங்களை எழுதுக.

* நீலாம்பிகை அம்மையார் தனித்தமிழில் முத்திரை பதித்த மறைமலையடிகளின் மகள் ஆவார்.

* தன் தந்தையைப் போலவே தனித்தமிழில் பேசுவதிலும் எழுதுவதிலும் சிறந்தவர்.

*இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகர வரிசை, முப்பெண் மணிகளின் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்களை தமிழுலகிற்குப் படைத்தளித்துள்ளார்.

* இந்நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

*III.* **நெடுவினா:**

1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

முன்னுரை:

கல்வி கண் போன்றது. கண்களில் ஒளியில்லையேல் வாழ்வினில் சிறப்பாக நடைபோட முடியாது. அதிலும் பெண்கல்வி நாட்டின் வளர்ச்சிக்கு மிகத் தேவையான ஒன்றாகும். கல்வியால் சாதனைப் படைத்த வீரப்பொண்களைப் பற்றி காண்போம்.

சங்ககாலப் பெண்கள்:

சங்க காலத்தில் பெண்கல்வி உயர்ந்து விளங்கியது. பெண்பாற் புலவர்கள் இலக்கியம் படைப்பதிலும், சாதனைப் புரிவதிலும் சிறந்து விளங்கினர். ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், பொன்முடியார், வெள்ளி வீதியார், காக்கைப் பாடினியார், நப்பசலையார், காவற்பெண்டு போன்ற சங்கக்காலப் பெண்பாற்புலவர்கள் தமிழுக்கும், பெண்கல்விக்கும் அருந்தொண்டு ஆற்றியுள்ளனர்.

பெண் மருத்துவர் முத்துலெட்சுமி:

* இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.

* சென்னை மாநகராட்சியின் முதல் போர்.

* இந்தியாவின் முதல் பெண், மருத்துவர்.

* சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

* 1930-இல் ஆதரவற்ற பெண்களுக்காக அவ்வை இல்லம் நிறுவியர்.

* 1952-இல் புற்றுநோய் சிகிச்சை நிறுவனத்தை அடையாறில் நிறுவியவர். பத்மபூஷன் விருது பெற்றவர்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்:

* மூவலூர் இராமிர்தம் அம்மையார் 1883 ஆண்டு பிறந்தார். அறிஞர் அண்ணாவினால் தமிழகத்தின் அன்னிபெசண்ட என்று அழைக்கப்பட்டார்.

* தமிழகத்தின் சமூகத் சீர்திருத்தவாதி.

* சிறந்த எழுத்தாளர்.

* தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.

பண்டித ரமாபாய்:

* இவர் சமூகத் தொண்டாற்றுவதில் தன்னார்வம் மிக்கவர். தடைகளை மீறிக்கல்வி கற்றுப் பண்டிதரானவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

சாவித்திரிபாய் பூலே:

* 1848 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

* நாட்டின் முதல் பெண் ஆசிரியராக் சிறப்பாக பணி புரிந்தவர்.

மலாலா:

* பாகிஸ்தானில் பெண்கல்வி வேண்டுமெனப் போராடியவர்.

* பன்னிரண்டு வயதிலேயே பெண்கல்வி வேண்டும் என்று தீவிரமாக செயல்பட்டவர்.

நீலாம்பிகை அம்மையார்:

* நீலாம்பிகை அம்மையார் தனித்தமிழில் முத்திரை பதித்த மறைமலையடிகளின் மகள் ஆவார்.

* தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகளின் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்களை தமிழுலகிற்குப் படைத்தளித்துள்ளனர்.

முடிவுரை:

இத்தகைய சாதனைப் பெண்மணிகளைப் பின்பற்றி இக்காலப் பெண்களும் கல்விகற்று சமுதாயப்த்தில் பணியாற்ற முன்வர வேண்டும்.

**துணைப்பாடம்: வீட்டிற்கோர் புத்தகசாலை**

1. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலிஉரையியல் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

முன்னுரை:

அறிஞர் அண்ணா அவாகள் காஞ்சிபுரம் தந்த காவியத் தலைவன். எழுத்தாளர், பேச்சாளர், அரசியல் வித்தகர் எனப் பல திறன்களைப் பெற்றவர். அவர் நூல்கள் மீது அதிக பற்று வைத்திருந்தார்.

நூலகம்:

* வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும் என் எண்ணமுடையவர் அறிஞர் அண்ணா, வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம் நாட்டுக்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை.

* வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்றுச் சிரமப்பட்டால் நமது நாட்டிலே நிச்சியமாக மனவளத்தைப் பெறமுடியும். வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையில்

அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கும் போக பொருள்களுக்கும் தரப்படும். நிலைமாறி புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும்.

நூல்கள்:

* மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழி செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள் கூட அல்ல. அடிப்படை உண்மைகளாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

* உலக அறிவை, தரக்கூடிய புத்தகங்களை சேகரிக்க வேண்டும். பூக்கோள, சரித்திர ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும், வாழ்வுக்கான வழிகளையும் காட்ட வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும்.

* மக்கள் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல்கள் இருக்க வேண்டும். நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

முடிவுரை:

நூல்களை படித்தால் நுண்மான்நுழை புலம் செழிப்படையும் கேட்டினை நீக்கி, தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும். வீட்டிலே அமைப்போம் புத்தக சாலை.

இலக்கணம்: இடைச்சொல் - உரிச்சொல்

*I.* **குறுவினாக்கள்:**

1. இடைச் சொற்கள் யாவை?

இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச்சொற்கள்.

2. இடைச்சொல் என்றால் என்ன?

பெயர்ச் சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும் இடையிலும், முன்னும் பின்னும் நின்று பொருளை விளக்கும் சொல் இடைச்சொல் எனப்படும்.

சான்று:

அவளோ வந்தான் (அவள் + ஓ)

ஓ வினாப் பொருள் தரும் இடைச்சொல்

3. உரிச்சொல் என்றால் என்ன?

செய்யுளுக்கே உரிய சொல் உரிச்சொல் எனப்படும்.

பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் முன் அடையாய் வரும்.

சான்று: உறுபொருள், கழி, நல்குரவு

4. உம் என்னும் இடைச்சொல் எவ்வெவ் பொருள்களில் வரும்?

உம் என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

சான்று: மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை.

5. ஓகார இடைச்சொல் எவ்வெவ் பொருளில் வரும்?

ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகிறது.

மேலும், ஐயம், உறுதியாக கூறுமுடியாமை மிகை, இது அல்லது அது எனும் பொருள்களில் வரும்.

சான்று: இன்றைக்கு மழை பெய்யுமொ ஐயம்.

6. ஏகார இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்?

ஏகார இடைச்சொல் பிரிநிலை வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும்.

சான்று: நடந்தே வந்தான்.

*II.* **கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. அத்து, அற்று, அம் ஆகியவை **சாரியைகள்** ஆகும்.
2. தல், அம், மை ஆகியவை தொழிற்பெயர் விகுதிகள் ஆகும்.
3. தான் என்னும் கடைச்சொல் **அழுத்தப்** பொருளில் வருகின்றது.
4. இடைச்சொற்கள் தனித்து இயங்கும் இயல்பை உடையன் அல்ல என்று கூறியவர் **தொல்காப்பியர்**.
5. பகுபத உறுப்புகள் **ஆறு** வகைப்படும்.